501

THE REGISTRAR OF BOOKS
10 JUN 1950
MADRAS

சிவமயம்.

# எட்டுகுடி முருகக்கடவுள்
வரப்பிரசாத
# நொண்டிச் சிந்து.

No. 41.



எனது காரண ரக்ஷகர் ரைஸ்மில் இஞ்சினீர்
J. S. பிராஞ்சிஸ்துரை அவர்கள் மாணவர் அருட்கவி
**M. K. P. M. மனோரஞ்சித நாயனர்**
இயற்றியதை

...ராமியோ கலர் அச்சுக்கூடத்தில்
பதிப்பித்தது. —
1950. [அணா 1.

Q26:33.24 EK
N50
178035

600 008.
178035
026:38211 DC
N50

சிவமயம்.

# எட்டுகுடி சிவசுப்ரமண்யக் கடவுள்பேரில்
## வரப் பிரசாத நொண்டிச்சிந்து.

---

### காப்பு வெண்பா.

முத்திதரும், மெய்ஞ்ஞான முருகக் கடவுளருள்
நத்தியெனைச் சூழ்ந்த நன்மையால் — பக்திமிகும்
அன்புயரும் புண்ணியமும் ஆனந்த சற்பதியும்
பொன் புதையல் கிடைத்ததுகைப் பொருள்.

### ஞானபூபதிகள் திருவாய் மலர்ந்தருளிய
### ஆசீர்வாதம்.

கண்ணொரு மூவாருள்ளக் கடவுளின் கருணைநோக்கால்
நண்ணிய சகலவாழ்வும் நம் மனோரஞ்சிதத்திற்
கெண்ணிய யெண்ணியாங்கு யிட்சசித்திக ளுண்டாகிப்
புண்ணிய வாழ்விலின்பப் பொருளிலும் கலப்பா நன்றே.

### நொண்டிச்சிந்து.

கேளுங்க ளன்பர்களே — இந்த
குவலயத்தில் சண்முகமாய் வந்த விதத்தை
நாளுமானந்த மாகநல் — சக
நாதனைக் குறித்து தர்க்கன் தவம் செய்ததால்
ஆளும் அரசு மூன்றுடன் — யாரும் தனக்கு
அடிமையாய் யேவல் பணிவிடைகள் செய்ய
யீசனிடத்தில் தர்க்கனும் — வரம்பெற்று நல்
வியல்புட னரசாண்டு வரும் வேளையில்
தேசம் புகழுமையாளை — தர்க்கன் மனையில்
திருமணம் செய்தாரரன் சிந்தை மகிழ்ந்து
நேசனென் றெண்ணி தர்க்கனும் — யீசன் தனக்கு

நின்று மரியாதைசெய்ய நெஞ்சில் நினைத்தான்
வாச முனர்ந்த முக்கண்ணன்—உமையாளுடன்
மறைந்தா ரந்ர சுவர்க்கமா மனைக்கன்றே
மோசமென் றெண்ணி தர்க்கனும்—யீசனையன்றி
வேள்விசெய்ய முயன்றதாய் முதல்வனறிந்து
ஆயிரம் சிரங்களுடைய—வீரபத்ர
ஆங்காரக் காளியிருவர் யங்கே யனுப்பி
வேள்விய மித்து வரவும்—தர்க்கன் சிரசை
வெட்டியதம் செய்து வந்தார் விண்ணவரஞ்ச
காளைமீ தேறும் அப்பனும்—தேவர்கள்மீது
கடுங்கோபம் கொண்டு சாபம் யிடும் நாளையில்
தேவர்கள் சாபம் நீங்கவே—சனகாதியுடன்
தெக்ஷணு முகூர்த்தமாக நிட்டை செய்கையில்
நெத்திக்கண் ணொளி தோன்றியே—ஆறுபொரிகள்
நேராகச் சரவணைப் பொய்கையில் விழ
கருவுருவானே னப்பனே—ஆறுருவாய்
கங்கையில் விளையாடினேம் அங்கம் குளிர்ந்து
திருமுலைப் பாலுமூட்டி னுள்—கார்த்திகைமார்
தினமமுதுண்டு யானும் சிசுவாகினேம்
ஆறு குழந்தைகளையும்—ஒன்ருகச் சேர்த்து
ஆறுமுக மென்று சத்தி பேருமிட்டனள்
பாலனென்றேந்தி சத்தியும்—கரத்திலேந்தி
பட்சமாய் பரமனுமை பாதுகார்த்தனற்
மூன்று வயதானவுடனே—பிர்மனிடத்தில்
முற்றும் வேதவழி பொருள் யாவுமுணர
பள்ளிக்கனுப்பினு ரென்னை—பிர்மனெனக்கு

178085

பாடம் சொல்லி வருகையில் பார்த்து பிர்மனை
ஓமென்ற அக்ஷரத்திற்கு—உண்மை பொரு
ளேதுமென்று யானும் கேட்டேன் உணர்ந்து
சொல்லாததால்
தள்ளிசிறை விட்டேன் பிர்மனை—யெக்கிரத்தால்
தட்டி பிர்மன் சிரசில் ரெண்டு குட்டும்
குட்டினேம்
பரமனை கேட்டோம் பிரணவம்— அவரும் சொல்ல
பாதை புரியாமல் மனம் வாதையானதால்
கரம்கொண்டுவாயும் பொத்தினர்—கைகளைக்கட்டி
கருத்தென்னக் கேட்டானும் பொருத்தமுற்று
நின்று உபதேசம் பெற்றனர்—அரனுக்கு நாம்,
நேர்வழியன் சொல்வதற்கு சுவாமி மலையில்
சாமிநாதனென்ற பேர் பெற்றோம்-சிவனுக்குநாம்
தகப்பன் சாமியென்ற பேரும் சகத்தோருரைக்க
பொதிகைமலை கும்பமுனிக்கு—ஞானநிலை
போதித்தும் அவர்க்குகந்த நீதிகள் சொன்னேம்
துதிபெறும் சத்தி வடிவேல்—கரத்திலேந்தி
சூரனை சம்மாரம்செய்து வீரமணிந்தோம்
அதிபதியானேம் வானேர்க்கு—தேவர்கள் துயர்
அகற்றினதால் இந்திரன் அகமகிழ்ந்து
பதியிலிருக்க வேண்டியே—இந்திரன் மகளை
பாணிக்கிரகம் செய்தளித்தான் காணிக்கையாக
நிதியுடன் வாழ்ந்தோம் மப்பனே-தெய்வானையுடன்
நீங்காமலிருந்தரசு ஓங்கிவரும்நாள்

நாரத முனிவரும் வந்தார் வள்ளியெனும்
நாயகியாளென்ற திருபடமெழுதி
பாரும் நீரென்று கொடுத்தார்—கரத்தில்பெற்று
பார்த்து திருவிழியினால் வேர்த்து அயர்ந்தோம்
ஊர்மலைச்சார் பின்வடக்கு—தினை புனத்தில்
உலாவிக்கொண்டிருக்கும் பெண் ஞமுனக்கே
என்று உரைத்தார் முனியும்—சென்றின்பின்
எழுந்து வள்ளியைத்தேடி யிச்சையும் கொண்டு
வேடருருவானே னப்பனே—வள்ளியைக்கண்டு
வெற்றிபெற வேணுமென்ற உற்ற மனதால்
வனத்தினருகில் கடந்தோம்—வள்ளியினைசை
வாங்கியே செவிகுளிர்ந்து யோகியேநின்றோம்
வாய்விட்டழைத்தோம் வள்ளியை—அவளிடத்தில்
வந்ததோ பெண்மானுமென்று அந்தமுரைத்தோம்
தனத்தின் பெருமை வர்ணித்தோம்—
வள்ளியினண்ணன்
தம்பிமாரரிய வேங்கை மரபாகினோம்
வளையல் சுமந்தெதிர் சென்றோம்—வள்ளிகரத்தை
மகிழ்ந்து பிடித்தும் கிழ ஆண்டியாகினோம்
களையாலயர்ந்தும் படுத்தோம்—தேன் தினைமா
கை நிறைய வாங்கியுண்டு மெய்யுமரிந்தோம்
குளரிவாய் பேசினோம் தண்ணீர்—சுனைக்கிவா
குடிக்கலாமென்றழைத்து பிடித்திழுத்தாள்
இணங்கியவள் பின்னாலேகினோம்—யானை முகனை
யெண்ணினே னவரைக்கண்டு பின்னால்
தொடர்ந்து

வணங்கி பிடித்தெனைக்கொண்டாள்—சண்முகம்
தோன்றி
மாமாலை சூட்டியழைத்து க்ஷேமமுடனே,
கழுகுமலை வந்தோமப்பனே—திருமணத்தை
பார்த்து தெய்வானை யென்மே லாத்திரம்
கொண்டு
கடுகடுத் தோடியே நின்றாள்—சன்னதியின்
கதவைத் திறக்கச் சொல்லிப் பதம் பாடினேம்
இகழ்ந்து பலவாராய் பேசினாள்-வள்ளியைத்தள்ளி
யிடித்து மயிர் பிடித்தடித்திடச் சென்றாள்
புகழ்ந்தும் மகிழ்ந்தும் பேசினேம்—தெய்வானைக்கு
புத்திகள் எடுத்துரைத்தும் நத்திடவில்லை [நற்
வள்ளி தெய்வானை யெனக்கும்—ஒவ்வொருநாளும்
வாக்குவாதம் நடந்ததை யார்க்கும் தெரிந்து
வெட்கமடைந்திருவரும்—தெய்வானை வள்ளி
விரும்பியொருமனதாய் வேண்டி வாழ்ந்தார்கள்
நாடு செழிக்க வேண்டியே—திருத்தணிகை
நகரெட்டுக்குடி சிக்கல் வேளூரமர்ந்தோம்
பாடும் புலவர்க்காகவே—உலகிலெங்கும்
பரவி சிவஸ்தலத்தில் நிறைந்திருந்தோம்
தேடும் அன்பர்களரிய—குன்னகுடி
திருப்பரங்குன்றம் திருச்செந்தூர் அமர்ந்தோம்
எங்கும் நிறைந்தோ மப்பனே—காவியுடை
யிடையிலணிந்தும் சத்திவேலு மேந்தினேம்
சங்கு சேகண்டியடித்தோம்—ருத்ராக்ஷ
தாவடம் கழுத்திலிட்டு நாடகம் செய்தோம்

திருநீரணிந்தோ மப்பனே—மயிலாசனத்தில்
தேவிவள்ளி தெய்வானை யிருபுரம் சூழ
நடனசபையில் நடித்தோம் சண்முகமென்று
நத்திடும் அன்பர்க்கு நற்புத்தியுரைத்தோம்
நற்கீரர்க்குபதேசம் செய்தோம்—அருணகிரி
நாதர்க்கு கருணை தந்து காதலை தீர்த்தோம்
பகல்போல் விளங்கும் மனதுள்—அனுதினமும்
படுத்து நித்திரைசெய்து அடித்திருப்போம்
அகலோம் அடியாளுறவை—னுதினமும்
ஆனந்தக்கடல்போலெண்ணி ஸ்நானங்கள்
செய்வோம்
மறவோம் உள்ளம் நினைந்தோரை—இல்லத்கேற்ற
வற்றாதச் செல்வ சுகத்தின் பாக்யம் தருவோம்
இறவாதிருக்கச் செய்குவோம்—சண்முக மென்றால்
இத்தரையில் பிறவாத முத்தி தருவோம்
நோயற்ற வாழ்வும் கொடுப்போம்-சண்முகமென்று
நோக்கியே துதிப்போருள்ள வாக்கிலிருப்போம்
சேய்விளையாடச் செய்குவோம்—சண்முகமென்று
சிந்தையில் நினைந்தவர்க்கு சொந்தமாகுவோம்
பூமிபொருளும் கொடுப்போம்—பொய்யற்றவாழ்வில்
புகழ்ந்து மகிழ்ந்திருப்போம் போசனமிட்டு
நேம நிட்டையும் தருவோம்—உலகிலெங்கும்
நெடுநாளாய் பேர் விளங்க-இடங்கொடுப்போம்
நலக்கரை மீதி லழைப்போம்—ஷண்முகமென்று
நாடிய அடியார்கன்னம் தேடியிடுவோம்

குலம் விளங்கிடச் செய்குவோம்—சண்முகமென்று
கும்பிடும் அடியவர்க்கு செம்பொன்னிடுவோம்
தலம் உயர்ந்திடச்செய்குவோம்—சண்முகமென்றால்
சத்துருவில்லாத வாழ்வு நித்தங்கொடுப்போம்
வாசம் பொருந்திடச்செய்வோம் சண்முகமென்றால்
வாலிப ரூபம் பெற்று வாழ்ந்திடச்செய்வோம்
அன்போடருட்கவி சொல்லும்—மனோரஞ்சிதம்
ஆக்கையுயிர் யழியாமல் கார்த்திடவந்தோம்
இன்பசுகமும் கொடுத்தோம்—மனோரஞ்சிதம்
எண்ணிய நலங்களெல்லாம் யீடேறச்செய்தோம்
புண்ணிய வழியைக் காட்டினோம்—மனோரஞ்சிதம்
புத்தியிலிருந்து தினம் நத்தி நடித்தோம்
மண்ணில்தீர்க்காயுள் கொடுத்தோம்-மனோரஞ்சிதம்
மனதிற்கிசைந்த செம்பொன்யினம் கொடுத்தோம்
லெட்சுமிகடாக்ஷம் கொடுத்தோம் மனோரஞ்சிதம்
நெஞ்சினில் குடியிருந்து நேர்வழி சொன்னோம்
இட்ச சித்திகள் கொடுத்தோம்—மனோரஞ்சிதம்
இருதயைப் குடிபுகுந்து இசை தமிழ் சொன்னோம்
பட்சம இனிமறவோம் நாம்—மனோரஞ்சிதம்
பக்திக்குகந்த ஞானமுத்தி தருவோம்
உத்தம குணத்தை யமைத்தோம்—மனோரஞ்சிதம்
ஊழ்வினையற்று வணங்க உண்மைகள் சொன்னோம்
நற்றமிழ்யெழுதிட சொன்னோம்—மனோரஞ்சிதம்
நாக்கினில் கலைமகளை நாட்டியே வைத்தோம்
உற்றதுணையாகியே வந்தோம்—மனோரஞ்சிதம்

உள்ளநாளுயர்ந்து வாழ்க உறுதிகள் சொன்னோம்
துட்சருறவும் அறுத்தோம்—மனோரஞ்சிதம்
தூதர் பயமற்று வாழ்க திருவருள் தந்தோம்
கட்சதிசையும் நீக்கினோம்—மனோரஞ்சிதம்
கைநிறைந்த கைப்பொருளும் மெய்ப்பொருள் தந்தோம்
பட்டப்பகல் போலாக்கினோம்—மனோரஞ்சிதம்
பரியரிந்தமுதன்ன பாக்கியமிட்டோம
சட்டசபையிலழைத்தோம்—மனோரஞ்சிதம்
சாயுச்ய பதவிபுக தவமிகச்செய்தோம்
புண்ணியம் புண்ணியமென்று—மனோரஞ்சிதம்
போற்றியே வணங்கிதொழப் புண்ணியமானோம்.

புண்ணியம். புண்ணியம். புண்ணியம்.

லெட்சுமி கடாட்ச இட்ச சித்தி யோகரகசிய

மடாலய அதிபர்

அருட்கவி M. K. P. M. மனோரஞ்சித நாயனார் மரங்குடி.

O26:58:211EX
128035

ஹோமியோ கலர் பிரஸ், திருவாரூர்.